<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No.460/2025</u>

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி- 1(PW-1)**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திருமூர்த்தி** | தொழில் | | **தனியார் வேலை** |
| த/பெ. | : | **கருணாநிதி** | **ஊர்** | | **மகாராஜபுரம்** |
| வயது | : | 39 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>21.01.2026</u>**

**<u>எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். திறந்த நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மகாராஜபுரத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என் கையொப்பம் எதுவும் இல்லை. வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1) கடந்த 12.11.20217 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த ஜீவாநந்தம் என்பவரும் எங்கள் சொந்த வேலையாக திருவையாறு சென்றுகொண்டிதோம் என்றால் இல்லை. அப்போது மருவூர் போலீசார் தில்லைஸ்தானம் பேருந்து நிறுத்தம் அருகே இரு சக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் ஜீவகர்னா என்கிற முகமது சமீர் மற்றும் செந்தில்நாதன் என்பவர்களை எங்கள் முன்பாக எதிரிகளை கைது செய்தபோது எதிரி ஜீவகர்னா தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் அவரிடமிருந்து 5 பவுன் எடையுள்ள செயின் ஒன்றையும், Bajaj Discover TN 68 H6641 என்ற எண் உள்ள ஊதாநிற இருசக்கர வாகனத்தையும் எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் குறித்து போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு மேற்படி காரணத்திற்காக சாட்சி கையொப்பம் செய்துவிட்டு எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
**திருவையாறு.**